Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.

மலர் 3	ஏப்ரல் 1943	இதழ் 4.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | ஏப்ரல் 1943 | இதழ் 4

ஒப்பு நோக்கு

அமரமும் ஆப்தால்மியாநியனடோரமும்

ரு. தி.

அமரம்

"கதிக்கு மிமையிற் சதைவளர்ந்து கண்ணும் மூடித் திறவாது
பதிக்கும் விழியில் பரந்துகுத்திப் பலவாய் நீரும் பீளையிடும்
மதிக்கு மேவரை நோக்கரிதாம் மலர்ந்த பூப்போல் சிவந்திருக்கும்
அதிக்குங் குணங்க ளிவைதாமும் அமரமென்றே அருளினரால்."

(பொ-ரை) குழந்தைகளுக்கு உண்டாம் அமரம் என்ற நோயில் கண்ணிமைகளின் உட்பக்கத்தில் சதைபோல் வளர்ந்திருக்கும் கண்ணிமைகள் மூடியவாறே இருத்தலின் திறப்ப (இமையை புரட்டுவ) தற்குச் சிரமமாய் இருக்கும். கண்களில் வேகமாய்க் குத்தல்போல் வலியுண்டாம். பலவிதமாக (சிபோலும், இளஞ் சிவப்பாயும்) நீர் வடியும், கண் கூச்சத்தினால் எதிரிலுள்ளவர்களைப் பார்க்க முடியாது. கண் புதிதாய் மலர்ந்த சிவப்புப்பூ போலச் சிவந்து தோன்றும்.

(அ.ந.வி.)

OPHTHALMIA NEONATORUM

In newborn infants both eyes are commonly affected. The disease is sometimes seen in quite young girls. In severe cases of blenorrhœa of the conjunctiva there is soon after the onset, serous infiltration of the palpebral mucous membrane-which consequently becomes tense, & shiny-marked chemosis of the bulbar conjunctiva. serous blood stained discharge, dusky redness, and swelling of the eyelids-which makes it difficult to evert them-pain in the eyelids, often of a shooting kind, burning sensations in the eyes and photophobia.

(Page 61 Swanzy's Diseases of the eye.)

செம்பு

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு பற்பம்

சுத்தித்த செம்பின் பொடி பலம் ஒன்றுக்கு ஆத்திச்சாறு பலம் இரண்டு விட்டு இரண்டு நாள் அரைத்துப் பில்லை செய்து நான்கு நாள் வெயிலில் உலர்த்திப் பிறகு ஆட்டு எருவினால் புடமிட்டெடுத்து இப்படியே ஆடுதீண்டாப்பாளைச்சாறு, வேம்பின் சாறு, கடுக்காய்ச் சாறு, செம்பைச் சாறு இவைகளொவ்வொன்றினாலும் அரைத்துப் பில்லை செய்து காயவைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாம்.

(தே. கரிசல்.)

வேறு

"........சிதாங்கி முனியருளாலே யிந்திரன் புதல்வன் பஞ்சாக்கினி யோமம் பக்கதினத்துக்குள்ளே சந்திர கணைபெற்று....."

(பொ-ள்) முள்ளங்கியின் சாற்றைக்கொண்டு செம்புப் பொடிக்கு விட்டு; முறைப்படி அரைத்து ஐந்து புடமிட்டெடுக்கப் பதினைந்து நாளில் பற்பமாம். (தே. மருத்துப்பாரதம்.)

செம்பு பற்பத்தின் அளவு

கடுகு, தினை, சாமை, கொள் இவ்வித்துகள் ஒவ்வொன்றையும் நந்நான்கு கூறுக்கிக் அப்பங்கினளவாகக் கொள்ளல்வேண்டும். இவை முறையே உத்தமம் ஆதியாய் அதமாத மாத மாதமம் இறுதியாய் பதினாறு பாகம் என்று இதன் அளவுப்பிரிவை முன்னோர்கள் கூறியுள்ளார்கள். இதனைக் கீழ்க்காணும் செய்யுள்களினால் அறியலாம்.

"சுத்த வவிடதஞ் சொன்ன பிரயோகம்
வித்தள வாகநால் வேற்றுமை யாயினு
முத்தம மாதி யுரைக்கு மிரண்டிரண்
டத்தனை யேதொகை யாகும் பதினாறே"

(திருமூலர்.)

"உத்தம மாதி முன்னால் அகப்பேய்
யோது மருந்தளவே
வித்தள வாகு மடி அகப்பேய்
மேலது சோடசமே" (அகப்பேய் சித்தர்.)

மருந்துண்ணும் நாளளவு

எழுநாள் உத்தமம், பதினான்குநாள் மத்திமம், இருபத்தோர் நாள் அதமம், இருபத்தெட்டுநாள் அதமாதமம் என்று கூறப்பட்டிருக்கின்றது.

செம்புபற்பத்தின் துணைமருந்தும் பிணி நீக்கமும்

செம்புபற்பத்தை அளவாகக் கீழ்க்காணும் அனுபானங்களில் கொடுத்துவர அவைகளின் நேர் குறித்துள்ள நோய்கள் நீங்கும்.

துணைமருந்து		தீரும் நோய்கள்
நீர்	—	சேட்ப நோய்கள்
வெந்நீர்	—	வாத நோய்கள்
நெய்	—	பித்த நோய்கள்
பால்	—	வல்லை நோய் (ஈரல் குறுக்கு வீக்கம்)
வெண்ணெய்	—	தலைநோய்
சர்க்கரை	—	கைவலி
துளசிச் சாறு	—	மூலையில்வரும் சிலந்தி, கொப்புளம், பரு, கட்டிகளும்
வெற்றிலைச் சாறு	—	விடாச் சுரம், பிரமியக் காய்ச்சல், நளிர் சுரம், பித்தபிரமைக் காய்ச்சலும்
கருப்பஞ் சாறு	—	நடுக்குவாதம்
கற்றாழைச் சாறு	—	கீல்களில் நரம்பு சுருட்டி வலித்து மேனியில் வியர்வையை உண்டாக்கும் பித்தவாத சயித்திய விகடோ பத்திரவம், வாதக் கிராந்தி வலி, பித்தமேக வாயு, கப வாதானலமும்.
தேன்	—	மறதியை உண்டு பண்ணுகின்ற உன்மத்த சேட்பம், வாயு, பைசாச சுரம், மேகானலம், மூர்ச்சைச் சந்நியும்.
நீலோற்பலம், தாமரை அல்லி, நெய்தல், கொட்டி இவைகள் ஒன்றின் பூச்சாறு	—	அனுமத்த சாத்திய ரோகங்களாகிய காக்கை வலி, ஆதங்கானல் வலி, பாரிடாத்திரி வலி, பெருவாரிக் காய்ச்சல், தொந்தாதி வலி, பூதவேதாள சந்நி வலி, பிராந்தியாகிருதி வலி, வாதாபி வல்லியாதி, மகாமூதண்டானு சாரம், மேனேக்கானலானு சாரம், பித்த சுரவிக்கல், வாதநாராயணூர்த்த சுவாசம், முயல்கன பொருமல், பாண்டுவையானல விக்கல், ஈளை இருமலானலப் பிரமை, நீருறு திணறல், மகாசுவேதானலம், பருவராலாதி யுப்புசம், பயித்தியக் கயபருவரலோபத்திரவம், பித்த சேட்பவன் மீகமும் தீரும்.

இதனையே திருமூல நாயனுர் பின்வருமாறு சுருக்கிக் கூறினுர்.

"வல்லை முதலாய் வருமலை வாதைக்கு
நல்லை வடுப்பொடி நாட்டு மனுபான
மொல்லை யுதக முரமாகு மாதொடு
குல்லை யிறுதி கொடுப்பதா யுண்மையே"

இதனைத் தேரர் கீழ்க் கண்ட செய்யுளால் விரித்துக் கூறினுர்.

"வல்லைக்குக்கங்கை வளிக்கறற்றீக் காச்சியம் பால்
வல்லைக்குக்கங்கை வலிக்கை புலம்—வல்லைக்குத்
தண்டரிக்கு நாகவல்லி சாய்க்கிக்கு நோய்க்கமரி
தண்டரிக்குத் தேனலிக்குத் தார்"

பத்தியம்

பண்டிதர்களால் விதிக்கப்பட்ட அளவுடனும் ஏற்பாடான நாளின்படியும் அவிழ்தத்தைப் புசிக்கும் காலத்தில் கூட்டிக் கொள்ளக்கூடிய நற்பத்தியப் பொருள்கள் நெய், வெண்ணெய், பால், அப்பம், அடை, சர்க்கரை, பூரி, அவல், பொரி, பயறு, வாழைப் பழம் இவைகளும் இவைபோன்ற மற்றைய பொருள்களுமாம். நிற்க இம்மருந்திஞல் உண்டாம் காங்கையின் கடூரமானது நோயின் கூட்டங்களைப் பற்றற்றுப் போகும்படிச் செய்யும். இம் மருந்தின் வேகம் நோய்போன பின்னும் மீறியெரிந்தால், அப்பொழுது அத் தீயின்வேக வெப்பமடங்க, தண்ணீர்போலான பண்டங்களை ஆகாரமாகக் கொடுக்கவேண்டும். அப்பொழுது ரசவர்க்கம் உடலில் பற்றிப் பாய்ந்து மயிர்க்காலுக்கு மயிர்க்கால் இரத்த புஷ்டியை யுண்டாக்கக் கூடிய வல்லமையைக் கொடுக்கும். மற்றும் வாலிபத்தையும், வண்மையையும், பராக்கிரமத்தையும் கொடுக்கும். இதனைக் கீழ்க்கண்ட மேற் கோளானுணர்க.

"முசிவ கற்றுமதை நெளிவு பத்யவழி
முறைகொ ளப்பிணிகள் வதிதல்போ
முளரி யொத்தகடு பசிமி குக்கவெரி
முடுகு மற்றவ துதணியவே
முகிலெ னக்கிருத மிழுது மப்பமடை
முதிய சர்க்கரைக ளபூபமாம்
முனைய வற்பொரிப யறுக னித்திரள்கள்
முதலு ணப்பரவு முடலெலாம்.

இசைய ரத்தமிகு தசைய மூத்தமிகு
மெழில்வி ருத்தியுறு மொளிவுசே
ரிரணி யத்தைநிகர் வணமி னப்பரவு
மிசைவ நித்யமகல திகமா
மினியு ரைப்ப திலையதன் மகத்துவமகி
யிடைம ருத்துவர்க ளறியவே
இரகசி யப்பொருளை வழுவறச் சொலுவ
ரெவரு மச்சமிலை சரதமே"

மற்றும் எலுமிச்சம் பழம், மாம் பழம், மாதளம் பழம், கிச்சிலிப் பழம், நாரத்தம் பழம், நாவல் பழம், வெள்ளரிப் பழம், நெல்லிப் பழம், பனங்கள், தமரத்தங்காய, காய்ச்சொரிக் கீரை, பீர்க்கங்காய், இலந்தைப் பழம், பெருங்களா, விளாம் பழம், கஞ்சி சுற்றிய சோறு, தயிர், மோர், பாகல் காய்கறி, அத்திப் பழம், மொச்சை போன்ற மற்றைய இனமான பொருள்களையும், தாம்பிர பற்பத்தைப் பொசிக்கின்ற நாள் எவ்வளவோ அவ்வளவு நாள் மறுபடியாகிற பரியந்தம் வரைக்கும் கூட்டக்கூடாது, மத்தியில் கூட்டினால் அவிழ்த பலத்தை இளமையிலேயே கெடுத்துவிடும்; பின்பலம் செய்யாது. மருந்து பலப்பட்டவுடன் தீபனம் வடவா முகாக்கினியைப் போலிருத்தலின், ஒரு நாளைக்குப் பல்வகையான பண்டங்களை பன்முறை புசிக்கினும் காய்ச்சிய இரும்பில் நீர்விட்டால் எப்படி வற்றுமோ அப்படி சீரணித்து விடும். சரீரத்திற்கு அதிக பலத்தை நித்தியமுங் கொடுக்கும். இதனைக் கீழ்க்காணும் செய்யுளாலும் உணரலாம்.

"புளியொன்று தவிரவெல்லாம் புசிக்கினு நவையுறாதை
இளைபெரு நெருப்புக்கீரமில்லை யென்பது போலாகும்
அனைமுசர் விகுசங்காடி யாமலி யடாதுபாகற்
சுளை யரமகட்பழ நெய்சுவை சருக்கரை மாநன்றே"

பத்தியம் கடைப்பிடித்தால் நன்மையைப் பயக்கும்.

செம்பு பற்பத்தின் சிறப்பு

இது செங்குட்டம், க்ஷயம்போன்ற கொடிய நோய்களைப் போக்கக்கூடியது. மற்றும் இது பாசுபதாஸ்திரத்துக்குச் சமானம். எங்ஙனமெனில். அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்தினால் சயிந்தவனைச் சங்காரம் பண்ணியபொழுது அவனுடைய தகப்பனையும் கொன்றான். அதைப்போல் தாம்பிர பற்பமாகிற பாசுபதாஸ்திரம் வாதசந்நி விடதோடத்தைப் போக்கி அவ்வியாதிக்கு முதற்காரணமாகிய அஜீரண மந்தாக்கினிக் கபத்தையும் போக்கும் என்பதாம்.

பின்னும் தாம்பிர பற்பத்தைக் காயாம்பூ இரசத்தில் அனுபானித்துக் கொடுக்க வாத குன்மம் தீரும் என்பதை,

"........ரவிசேயைத் தனஞ்செயன் மாயன் போல்
கொல்வே னெனவுரைத்தான்........" என்றும்,

வயித்தியனுன கண்ண னினிமேல்
வடிக்கணை தொடுத்துயிர் குடித்திடிங்கிவனை
தாமசமினி வேண்டாம் புரிந்திடு
தனஞ்செய வெனுந்தொறு முனிந்தனனிகவி
தாம்பிர முதலான பெயர்பெறு
தனிக்கணை யினத்தொடு நினைத்ததையெடுத்து
அனுபான மந்திரத்மெனும் பிரையோக
வாக்கினையாக்கியே போக்கின னதுபோய்
ஆதவன்மகன் கழுத்தைக் கறுக்கென
அறுத்துயிர் பறித்தது தெறித்ததுதலையே"

என்று கூறும் தேரன் மருத்துப் பாரதத்தாலு மறிக.

நிற்க, முசுமுசுக்கைச் சாறு, துளசிச் சாறு சமன் கூட்டிப் புளியின் வித்தளவு எடுத்து அதில் தாம்பிர பற்பத்தை எள் முனையளவு சேர்த்து உண்டால், மரத்தின் வேரைநோண்டி யகற்றக் கிளை முதலியன அற்றுப்போவதுபோல, சாதலைத் தடுத்துவிடும். அதனல் கபம் முரிய அதனல் வருகின்ற மற்றைப் பிணிகளும் தீர்வனவாம் என்பதை கீழுள்ள செய்யுள் உணர்த்தும்.

முசு முசுக்கையிலை துளவபத்ரிரச
மொழியிவை கலவை செய்ததில்
முனையெளிற் சிறிது புளியின் வித்தளவில்
முழுகவைத்திதை யுணயிலவே
முதன் மிருத்தையடு மதையடக்கபமு
முரியு மற்றதுவு முரியுமே
முதலறக் கிளைகளறலெனப் பிணிகண்
முழுது மற்றுவிடு மிதுமெயே

மற்றும் தாம்பிர பற்பத்தினை யருந்தியவர்களடையும் சிறப்பை கீழ்க்கண்ட வடிகளால் நன்குணரலாம்.

"செம்பின் பொடியுண்டு தேக முரமுண்டு
செம்பின் வடிவுண்டு செய்தவங் கையுண்டு
செம்பின் முடிவெலாந் தெய்வத மாகவோர்
செம்பின் குலந்தி—கரமா குமே" (திருமூலர்.)

(தொடரும்)

கண்ணோயும் காற்றுக்காலமும்

T. S. அமிர்தலிங்கம் பிள்ளை, தஞ்சாவூர்.

நயன நூல்களில் கூறப்பட்டிருக்கும் கண்ணோய்கள் தொண்ணூற்றாறனுள் ஒன்றாகிய "கண்ணோய்" என்ற வியாதியைப்பற்றி என் சிற்றறிவிற் கெட்டியவாறு சிறிது கூறுவேன்.

எந்நாளும் வாராது காற்றுக்காலம்
　எடுக்குமேவலிகாணும் இமையும் வீங்கும்
புண்ணாகும் நீர்ப்பீளை உறங்கொட்டாது
　புதுமையாய் மூன்றுநாள் போகநோகும்
விண்ணார நோக்கொட்டாது பக்ஷமொன்றில்
　விதமாகத் தீருமிது தானுமென்று
கண்ணோய் குணங்களிவை தானென்று
　கருதினார் புவிமீதில் கண்டுதானே

இச்செய்யுளில் "என்னாளும் வாராது காற்றுகாலம் என்று கூறியிருக்கிறபடி காற்றுகாலங்களில் இந்நோய் உண்டாவதைக் காண்கிறோம். இரண்டாவதாக "எடுக்குமே வலிகாணும் இமையும் வீங்கும்" என்று கூறியபடி இமைகள் வீங்கி வலியும் உண்டாகிறது. மூன்றாவதாக "புண்ணாகும்" என்று கூறியிருக்கின்றார். அது மெய்யே. அங்கிலத்தில் இவ்வியாதிக்கு "Sore Eyes" என்று பெயர் கொடுத்திருப்பது மிகப் பொருத்தமே. Sore என்ற அங்கில மொழிக்கு புண் என்று அர்த்தமல்லவா? நான்காவதாக "நீர்ப் பீளை" என்று கூறியிருக்கின்றார். நீர் என்றதற்கு ஆங்கிலத்தில் Watering என்று கூறப்படும். பீளை என்பதை ஆங்கிலத்தில் Mucus என்பார்கள். நீரும் பீளையும் உண்டாகி துர்க்கந்தத்தோடு பார்ப்போர் கண்களும் கூசுகின்றன. ஐந்தாவதாக மூன்றுநாள் வலி உபத்திரவம் அதிகமாயிருப்பதால் தூக்கம் வராது. வெளிச்சத்தைப் பார்க்கவும் முடியாது. இந்நோய் தீர்க்கமாய் சௌக்கியமாவதற்கு ஒரு பக்ஷம் அதாவது 15 நாட்கள் ஆகும். இந்த நூலுண்மையை அறியாதவர்கள் இந்நோய்க்குச் செய்யும் பண்டிதம் எண்ணில. நந்தியாவர்த்திப் பூவைப்பிழிதல், நல்லெண்ணெயை கண்ணுக்குள் விடுதல், கற்றாழைச் சோற்றினைப் பிழிதல், எலுமிச்சம் பழச்சாற்றினைப் பிழிதல், குடியோட்டிப்பூண்டின் பாலை விடுதல், கருவேலிலையைக்கூட்டுதல், வெண்ணெயும் சோறும் ஒத்தடமிடுதல், கரிவளையலை அரைத்துப் பற்றுபோடுதல், நாமக்கட்டியை இழைத்து கண்ணைச் சுற்றிப் பற்றுபோடுதல், கோழி முட்டையை அவித்து வைத்துக் கட்டுதல், நாகரீகமற்ற சிறு குப்பங்களில் ஆணுக்குப்

இதன் பொருள்

இமையானது தடித்து, கடுப்புண்டாகும், கண்ணானது சுருங்கியிருக்கும். நீரும் பீளையும் உண்டாகும். யாதொரு மருந்துமின்றி தானாகவே வெளுத்துப்போகும். சிவப்பு உண்டாவதும் தனக்குத் தானே வெளுத்துப்போவதும் இந்நோயின் இயற்கைக் குணமாயிருக்க அக்காலங்களில் நோயாளிகள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த சமையமாயிருப்பின் சுவாமி சௌக்கியப்படுத்தி விட்டார். அவர் மகா வரதர் என்று சந்தோஷமடைவார்கள். இரண்டு நாள் சென்ற பிறகு பழைய குருடி கதவைத் திறடி என்றதுபோல் கண் சிவந்து உபத்திரவமுண்டாகும். கண் கூச்சமடைந்து, பார்வை பூமியை நோக்கும். நேரில் நிமிர்ந்து பார்க்க இயலாது. இவைகளுக்குள் சதை வளர்ந்து உறுத்தும், மேலிமையைப் புரட்டிப் பார்க்க சதை கருவிழியை மறைக்கத் தக்கதாய் வளர்ந்து கிடக்கும். இத்தகைய குணங்கள் காணப்படுமாயின் நீர்ப் பில்லமென்று சொல்லப்படும்.

(தொடரும்)

Printed at the Rudisill Press, Royapettah Madras
and Published by Dr. V. N. Sama Rao, L.I.M.
at 8, Sarojini Street, Theagaroya Nagar, Madras.